DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 109/2024** | |
| Prosecution Witness | | | : | **PW - 1** | |
| Name | : | திரு.கார்த்தி | Occupation | : | விவசாயம் |
| Father's Name/ Husband | : | கலியமூர்த்தி | | | |
| Village | : | சுந்தரபெருமாள் கோவில் | Age | : | 38 |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of March 2026.

11-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் :3.35**

(1 முதல் 6 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது சுந்தரபெருமாள் கோவில் மேலவெள்ள பிள்ளையான் பேட்டை தெருவில் வசிக்கிறேன். விவசாய கூலி வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரிகள் என் ஊர் பக்கத்து தெருவை சேர்ந்தவர்கள். 3 வருடங்களுக்கு முன்பு புதுவருடம் பிறப்பதற்கு முந்தைய நாள் என் தம்பி காயம் பட்டு கிடந்தான். என் தம்பியை தஞ்சாவூர் மருத்துக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தேன். போலீசார் வந்து மருத்துவமனையில் விசரித்தார்கள் யாரால் இவ்வாறு நடந்தது என்று கேட்ட போது எனக்கு தெரியாது என்று சொன்னேன். கையெழுத்து கேட்டார்கள் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும்புகார் வாக்குமூலத்தில்

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/-J.Radhika,
Additional District Judge
Fast Track Court,
Kumbakonam.

உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசார**ணை

நான் போலீசார் விசாரணையில் 31.12.2022 ம் தேதி இரவு 12.00 மணியளவில் என் தம்பிகள் ஸ்ரீதர் மற்றும் சந்தோஷ் ஆகிய இருவரும் வீட்டு வாசலில் தனது நண்பர்களுடன் புத்தாண்டை கொண்டாட நின்று கொண்டு இருந்த போது எங்கள் ஊரை சேர்ந்த வீரமணி மகன் சஞ்சய் அவரது அண்ணன் சந்தோஷ் மற்றும் அவரது நண்பர்கள் புகழேந்தி, திருமலை ஸ்ரீனிவாசன், உத்தாணி பாலு மகன் சஞ்சய், சிலம்பரசன் ஆகியோர் என் தம்பியை பார்த்து யாருடா என் நண்பன் சந்தோசை அடித்தது என்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டு இருக்கும் போதே என் தம்பி ஸ்ரீதரை மற்ற எதிரிகள் பிடித்துக்கொள்ள வீரமணி மகன் சஞ்சய் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் இத்தோடு செத்து தொலைந்து போடா என்று ஓங்கி ஸ்ரீதரின் வலது பக்க அடி வயிற்றில் குத்தினார் என்றும், என் தம்பி கீழே விழுந்து சத்தம் போடவே நான் ஓடிப்போய் பார்த்த போது வயிற்றில் ரத்த காயத்துடன் கிடந்தவனை நானும், எங்கள் தெருவை சேர்ந்த பாலு மகன் கார்த்திக், ராமகிருஷ்ணன் மகன் கண்ணன் ஆகியோர் மருத்துவமனை கொண்டு சென்று புகார் வாக்குமூலம் கொடுத்தாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்:3.42**

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/-J.Radhika,
Additional District Judge
Fast Track Court,
Kumbakonam.